## மெய்ப்பாட்டியல்

-தொல்காப்பியர்

**முன்னுரை** :

இலக்கியத்தைப் படிக்கும் தோறும் அதன் பொருளை ஆழப்படுத்தும் வகையில் காட்டப்படும் உணர்ச்சி வெளிப்பாடே சுவை என்னும் மெய்ப்பாடு ."சொற் கேட்டார்க்குப் பொருள் கண் கூடாதல் "என்பார் தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர் கவி கண்காட்டும'என்றும் அவர் குறிப்பிடுகிறார். நாடகத்தில் நடிப்பவரிடத்தில் தோன்றும் மெய்ப்பாடுகள், காண்பவர் இடத்திலும் உணர்வுகளைத் தோற்றுவிக்கும். இலக்கியத்தில் வரும் செய்தி கண்ணெதிரே தோன்றுமாறு காட்டப்படுவதே மெய்ப்பாடு. இலக்கியத்தின் வடிவமும் பொருளும் சார்ந்த மெய்ப்பாடு மிகச்சிறந்த அழகியல் கோட்பாடு.

**நூற்குறிப்பு** :

- ✓ தொல்காப்பியம் - தொன்மை + காப்பியம்
- ✓ தொல்காப்பியம் தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூலாகும் .
- ✓ இதனை இயற்றியவர் தொல்காப்பியர் .
- ✓ மிகவும் பழமையான காப்பிய நூல் என்பதால் தொல்காப்பியம் என்று அழைக்கப்படுகிறது .
- ✓ தொல்காப்பியம் 1602 பாக்களால் ஆனது .
- ✓ எழுத்து ,சொல் ,பொருள் என மூன்று அதிகாரங்களை உடையது .ஒன்பது இயல்களைக் கொண்டது .
- ✓ தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தில் உள்ள ஒன்பது இயல்களில் ஒன்று மெய்ப்பாட்டியல் .
- ✓ இந்நூல் இயற்றப்பட்ட காலம் கிபி 2 ஆம் நூற்றாண்டு .
- ✓ பழந்தமிழரின் நாகரிகச் செம்மையினைத் தெள்ளத் தெளிய
- ✓ விளக்கும் ஒப்பற்ற பெருநூல் ஆகும் .
- ✓ தமிழ் மொழியின் அமைப்பை விதிகளாக்கி விளக்குவதோடு தமிழ்க் கவிதையியலின் நுட்பங்களையும் பேசுகிறது .

- ✓ கவிதைகளுக்கான பொருண்மை, உறுப்புகள், உத்திகள், அழகு ஆகியவற்றைச் சிறப்புற எடுத்தியம்புகிறது .
- ✓ இந்நூல் முழுமைக்கும் இளம்பூரணர் உரை எழுதியுள்ளார்.

**நகை:**

**பாடல் வரிகள் :**

**ஈட்டி புகழ்நந்தி பாண! நீ எங்கையர் தம்**
**வீட்டிருந்து பாட விடிவளவும் - காட்டிலழும்**
**பேயென்றாள் அன்னை பிறர்நரியென் றார்தோழி**
**நாயென்றாள் நீயென்றேன் நான்.**

**பாடல் விளக்கம் :**

புகழ்மிக்க நந்திவர்மன் என்னும் மன்னனின் புகழ்பாடக் கூடியவனே !நீ !(பாணன் - இசையோடு பாடல் பாடி பரிசில் பெறுபவன் ).எங்கள் தங்கையர் வீட்டிலிருந்து விடியும் மட்டும் பாடினாய்! அதைக்கேட்டு, என் தாயோ, விடியவிடியக் காட்டில் அழும் பேய் என்றாள். மற்றும் அங்கிருந்தவர்களோ நரி ஊளையிட்டது என்றனர் .என் தோழியோ நாய் குரைத்தது என்றாள். நான் மட்டும் உன் குரலை அறிந்துகொண்டு நீதான் பாடுகிறாய் என்றேன்.

அழு

**பாடல் வரிகள் :**

**ஐயோ! எனின் யான் புலி அஞ் சுவலே;**
**அணைத்தனன் கொளினே, அகன்மார்புஎடுக்கல்லேன்!**
**என்போல் பெருவிதிர்ப்பு உறுக, நின்னை**
**இன்னாது உற்ற அறனில் கூற்றே!**

**பாடல் விளக்கம் :**

போரில் இறந்து விட்ட தலைவனின் உடலைப் பார்த்துத் தலைவி ,ஐயோ! என்று நான் கதறினால் புலி வந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன் .உன்னை தூக்கி எடுத்துச் செல்லலாம் என்றால் அகன்ற மார்பு கொண்ட உன்னைத் தூக்கவும் முடியவில்லை.

உன்னைக் கொன்ற அறம் இல்லாத கூற்றம் (எமன் )என்னைப்போல பெரிது நடுக்க முறுவானாக!

3. **இளிவரல் (சிறுமை )**

**பாடல் வரிகள் :**

**தொடர்ப் படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய**
**கேள் அல் கேளிர் வேளாண் சிறு பதம்,**
**மதுகை இன்றி, வயிற்றுத் தீத் தணிய,**
**தாம் இரந்து உண்ணும் அளவை**
**ஈன்மரோ, இவ் உலகத்தானே?**

**விளக்கம் :**

(சேரன் கணைக்கால் இரும்பொறை சிறையில் தண்ணீர் கேட்க ,சிறைக் காவலன் காலந்தாழ்த்திக் கொடுத்ததால் ,அதை அருந்தாமல் தவிர்த்து ,தனக்கேற்பட்ட சிறுமையை எண்ணிப் பாடியது )

நாயைக்கட்டுவது போலச் சங்கிலியினால் என்னைக் கட்டி வைத்து துன்பத்தில் ஆழ்த்திய ,நட்பு இல்லாத பகைவரின் உதவியால் கிடைக்கும் தண்ணீரை மனவலிமை இன்றி ,வயிற்றுப் பசியைத் தணிக்க கையேந்தி இரந்து உண்ணும் நிலையில் இருக்கிறேன் .இப்படி வாழ்வதற்காகவோ இவ்வுலகில் என்னை என் பெற்றோர் பெற்றனர் ?

4. **மருட்கை (வியப்பு )**

**பாடல் வரிகள் :**

**அமரர்க்கு அரசன் தமர் வந்து ஈண்டி, அவள்**
**காதல் கொழுநனைக் காட்டி, அவளொடு, எம்**
**கண்-புலம் காண, விண்-புலம் போயது**
**இறும்பூது போலும்;**

**பாடல் விளக்கம் :**

இந்திரன் கோவலனோடு வந்து பத்தினியாகிய கண்ணகியை விண்ணுலகு அழைத்துச் சென்ற வியப்பான காட்சியை நாங்கள் கண்டோம்

**அச்சம்** :

(யானை சினந்து வர மகளிர் நடுங்கி அஞ்சியதை வெளிப்படுத்துதல்)

**பாடல் வரிகள்** :

***மையல் வேழம் மடங்கலின் எதிர்தர,***
***உய்வு இடம் அறியேம் ஆகி, ஒய்யென***
***திருந்து கோல் எல் வளை தெழிப்ப, நாணு மறந்து,***
***விதுப்புறு மனத்தேம் விரைந்து அவற் பொருந்திச்***
***சூர் உறு மஞ்ஞையின் நடுங்க,***

**பாடல் விளக்கம்**:

"மதம் பிடித்த யானை மரங்களை முறித்தது .கார்கால மேகம் இடிப்பது போல முழங்கியது. உயிர் பிழைப்பதற்கு வேறு இடம் காணவியலாமல் மன நடுக்கம் அடைந்தோம். .உயிரினும் சிறந்த நாணத்தைக் காக்க மறந்தோம். வளையல்கள் ஒலிக்க விரைந்து ஓடிச் சென்று அவனைச் சேர்ந்து மயில் போல் நடுங்கி நின்றோம்.

**பெருமிதம் (பெருமை )**

**பாடல் வரிகள்** :

**உறுசுடர் வாளோடு ஒரு கால் விலங்கின்**
**சிறுசுடர் முற்பேர் இருளாங் கண்டாய் -**
**எறி சுடர் வேல்**
**தேங்குலாம் பூந்தெரியல் தேர்வேந்தே நின்னோடு**
**பாங்கலா மன்னர் படை**

**பாடல் விளக்கம்** :

(பெரு வீரன் ஒருவன் தனியாகப் பெரும்படையை எதிர்க்கும் பெருமிதத்தைக் குறிப்பிடுதல் )

எறிதற்குரிய ஒளிமிக்க தேன் நிறைந்த பூமாலையும் உடைய தேர் வேந்தனே !வாளுடன் பகை அரசனின் பெரும்படையை நான் தடுப்பேன் .என்முன் அப்பெரும் படை சிறு விளக்கின் முன் இருள் ஓடுவது போல ஓடும் .

**வெகுளி (சினம் )**

**பாடல் வரிகள்**

**உறுதுப்புஅஞ்சாதுஉடல்சினம்**

**செருக்கிச் சிறுசொல்சொல்லியசினங்கெழுவேந்தரை**

**அருஞ்சுமஞ் சிதையத் தாக்கி முரசமொடு**

**ஒருங்கு அகப்படேஎன் ஆயின்**

தன்னை இறைவன் என்று எள்ளிய பகை வேந்தர் மீது பாண்டிய நெடுஞ்செழியன் சினம் கொண்டு வஞ்சினம் கூறுதல்.

**பாடல் விளக்கம்** :

"சிறுசொல் சொல்லிய சினம் மிக்க வேந்தரை வென்று அவர்கள் சிதறி ஓடுமாறு போரிட்டு அவர்களது முரசையும் ஒருங்கே கைப்பற்றுவேன்"

**உவகை (மகிழ்ச்சி )**

**பாடல் வரிகள்** :

**மண்டலமதியமன்னமாசறுமுகத்தினாளுந்**

**திண்டிறன்மருகன்றன்னைச்சென்றெதிர் கொண்டு கண்டு**

**மர்கண்டல் தன்னை சென்றுக்கொண்டு வெண்டிரை**

**மகர வேலை விரிப்புனன் முகந்து தோன்றும்**

**கொண்டலை மகிழ்ந்து காணுங் குளிர்பசுந்தோகை போன்றாள்**

**பாடல் விளக்கம்** :

(மழை மேகத்தைக் கண்ட மயில் போல நீல வண்ணனாகிய கண்ணனைக் கண்ட குந்தியின் மகிழ்ச்சி)

`முழு நிலவு முகத்தாள் குந்தி, திறன் மிக்க மருமகன் கண்ணனை எதிர்கொண்டாள். .வெள்ளலைகள் நிறைந்த நீலக் கடலின் நீரை முகந்து வரும் மேகத்தைக் கண்ட தோகை மயில் போல் மகிழ்ந்து வரவேற்றாள்.